GOVERNMENT OF MADRAS

सत्यमेव जयते

544

சென்னை ராஜ்யத்தில் கதர் அபிவிருத்தி

ACC-TVAL-00500

சென்னை

சர்க்கார் செய்தி இலாகா,

வெளியீடு.

101451

PRINTED BY
THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS
MADRAS

குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தியில் நாம் முன்னேறவேயில்லை. காரணம் நன்கு தெரிந்ததே. எல்லோரும் மேற்கொள்ளக்கூடிய வகையில் ஒரே ஒரு கைத் தொழில்தானிருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். அதற்கு மாருக இன வாரியாகப் பிரிக்கப்படாத, பல்வேறு கைத்தொழில்களில், தமது விருப்பம் போல் நம் மக்கள் ஈடுபடுகின்றனர். மேற்கொள்ளத் தக்க அந்த ஒரு கைத்தொழிலில் எல்லோருக்கும் விருப்பமில்லாதிருக்கலாம். ஆனல் தேசீய நிதி அந்தக் கைத் தொழிலுக்காகவே பெரும்பாலும் செலவு செய்யப்படவேண்டும். அதுதான், கையினுல் நூல் நூற்கும் கைத் தொழில். அதை எல்லோராலும் மேற்கொள்ள முடியும். மக்களில் பெரும்பாலோர் அதைத் தவிர வேறு கைத் தொழிலை விரும்பமாட்டார்கள். கையினுல் நூல் நூற்கும் கைத் தொழிலுக்குப் புத்துயிரளிக்கவேண்டுமென்று சொன்னல் மட்டும் போதாது. நாம் மேற்கொள்ளும் பல்வேறு கைத் தொழில்களுக்கும் அது தாய்த் தொழில் என்பதை வற்புறுத்த வேண்டும். அப்பொழுது தான் நம் கிராம வாழ்க்கையின் பெருமையை நாம் மீண்டும் நிலை நாட்ட முடியும்.

—மகாத்மா காந்தி.

சேகரிக்கப்பட்ட செல்வத்தை எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்து கொடுப்பதென்பது சாத்தியமானதல்ல. எல்லோரையும் அதற்கு ஒத்துக் கொள்ளும்படி செய்வதில் வெற்றி காண முடியாது. ஆனால், செல்வம், பலரிடம் சமமாகப் பரவிக் கிடக்கும் முறையில் அதை உற்பத்தி செய்வது சாத்திய மானதாகும். அதுவே கதர் உற்பத்தி. விவசாயத்தையும், ஜவுளியையும் இந்திய மக்களின் பிதிரார்ஜித குடும்பச் சொத்துக் களாய்க் கொள்ளவேண்டும். இந்தச் சொத்துக்கள் பலகோடி மக்களுக்குச் சொந்தமானவை. இரண்டும், எல்லோரும் பங்கெடுத்துக் கொள்ளத் தகுந்த கைத் தொழில்கள். எங்கும், எல்லா வீடுகளிலும் இவற்றை மேற் கொள்ள முடியும். முதலாளிகள், இதர கைத் தொழில்களைப் பெருக்கட்டும். விவசாயத்தையும், ஜவுளி உற்பத்தியையும் அப்படியே பொது மக்களிடம் விட்டுவிடவேண்டும். ஏனெனில், அவை தான், நாட்டிலுள்ள ஏழை மக்களின் ஆஸ்தியாக விளங்குகின்றன.

சி. ராஜகோபாலாச்சாரியார்.

1. கிராமங்களில் வேலையில்லாமையும் அதன் விளைவும்.

சென்னை ராஜ்ய ஜனத் தொகை 5,69,50,000. இதில் சற்றேறக் குறைய 3,80,00,000 பேர் விவசாயத்தை நம்பி வாழ்பவர்கள். விவசாயம், வருஷம் பூராவும் வேலை தரத்தக்க தொழிலல்ல. நதி கழிமுகப் பிரதேசங்களில் கூட விவசாயிகளுக்கு வருஷத்தில் நான்கு மாதங்களுக்கு வேலை கிடையாது. இதர வரண்ட பிரதேசங்களில் வருஷத்தில் எட்டு மாதங்களுக்குக்கூட விவசாய வேலை இல்லாமற் போகும். பயிர்களும் பருவ மழையை நம்பியிருப்பதால் விவசாயத்தின் பலனையும் நிச்சயமாய்க் கூற முடியாது. இப்படி வருஷத்தில் சராசரி நான்கு மாத காலம் சோம்பேறித் தனமாய்க் காலங் கழிக்கும் நிர்ப்பந்தத்திலுள்ள ஒரு சமூகம் எப்படி செழிப்பாகவும், சுக வாழ்வுள்ளதாயுமிருக்க முடியும். கிராமங்களில் எப்பொழுதும் வறுமை தாண்டவமாடுவதற்கு இதுவே காரணம்.



வீண் பொழுது போக்கு : கிராம மக்கள், ஒரு விடுமுறை நாளில் செய்வது போன்று உட்கார்ந்து வேடிக்கையாய்ப் பேசிக் கொண்டிருக்கின்றனர். இம்மாதிரிப் பல தினங்கள் கழிக்கும்படி நேரிடுகிறதென்று அவர்களே புகார் கூறுகின்றனர். செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் நடுப்பகலில் ஒங்கோல் தாலூகாவிலுள்ள சாந்தனுதாபொடு கிராமத்தில் எடுக்கப்பட்ட படம் மேலே காணப்படுகிறது. அந்தக் கிராமத்திலுள்ள 40-க்கு மேற்பட்ட குடும்பங்களில் 20 குடும்பங்களிலுள்ள ஆண் மக்களுக்கு அன்று வேலை இல்லை. அங்குள்ள காலி நிலங்களிலுள்ள மாட்டுச் சாணத்தைப் பொருக்கும் வேலை தான் தங்களுக்குக் கிடைக்கக்கூடியதென்று பெண்கள் சொன்னார்கள். அந்த வேலை மூலம் அவர்களுக்கு ஒன்று அல்லது இரண்டணாக் கிடைக்குமாம்.

அபிவிருத்தி யடைந்த இதர நாடு எதிலும் இவ்வளவு வேலை யில்லாத் திண்டாட்டங் கிடையாது. 1949-ம் வருஷத்தில், ஜனத் தொகையில் 1·6 சத விகிதத்தினர் இங்கிலாந்திலும், 5·5 சத விகிதத் தினர் அமெரிக்காவிலும் வேலையில்லாமலிருந்தனர்.

நம் ராஜ்யத்திலுள்ள இந்த தேசீய விரயத்தை பின் கண்டவாறு பணமாகக் கணக்கிடலாம்.

குழந்தைகளையும், வயது முதிர்ந்தவர்களையும் தவிர, ராஜ்யத்தில் வேலை செய்யத் தகுதியுள்ள விவசாய மக்களின் தொகை சுமார் 2,70,00,000.

வருஷத்தில் சராசரி நான்கு மாதங்களில் விவசாய வேலை கிடையா தென்றும் அந்தக் காலத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு, பஞ்ச நிவாரண வேலை போன்று வேலை கொடுக்கபபடுவதாகவும் வைத்துக் கொள்வோம். மாதத்தில் 25 நாட்கள் வீதம் நான்கு மாதங்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது. அப்பொழுது அவர்களுடைய வருமானம் 2,70,00,000 × 100 × 6 அணுக்கள். அதாவது ரூ. 101,25,00,000.

சாதாரண வருஷத்தில் விவசாயிகள் வேலையில்லாமலிருப்பதால் ஏற்படும் செலவு ரூ. 101·25 கோடி. பருவ மழை சரியாய்ப் பெய்யாத வருஷங்களில் அவர்களுக்கு வேலையில்லாத காலம் அதிகரிக்கும். அதற்குத் தகுந்தாற்போல் இந்தச் செலவு தொகையும் அதிகரிக்கும்.

ராஜ்ய சர்க்காரின் மொத்த வருமானம் எல்லாத் துறைகளிலுமாக வருஷத்தில் ரூ. 60 கோடி.

இந்தச் செலவு தொகை ஒரு தோராய மதிப்பீடுதான். உண்மை யாக செலவு இன்னும் அதிகமாயிருக்கும். ஏனென்றால் ஒரு உற்பத்தித் தொழிலில் தினம் ஆறு மணி நேரம் வேலை செய்யும் ஒருவரின் வேலை மதிப்பீடு ஆறு அணுவுக்கு அதிக மிருக்கு மென்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

இப்படிப்பட்ட பெருவாரியான மனித சக்தி வீணாக்கப்படுகிறவரை யில் நம் கிராமங்களுக்குப் புத்துயிரளிப்பதென்பது இயலாத காரியம். இது பற்றி காந்திஜி கூறியதைக் கவனிப்போம்.

> "ஏதாவதொரு குடிசைக் கைத் தொழிலை மேற்கொள்ளா விட்டால் ஒரு இந்திய விவசாயியின் வாழ்க்கை வியர்த்தமே. நிலத்தின் சாகுபடியை மட்டுங் கொண்டு அவர் தன் வாழ்க் கையை நடத்திவிட முடியாது. ஒரு உப கைத் தொழில் அவருக்கு இன்றியமையாதது."

2. கதர்—கோடிக் கணக்கானவர்களுக்கான கைத் தொழில்

கையினால் நூல் நூற்பது ஒரு லாபகரமான கைத் தொழிலல்ல வென்று சில சமயங்களில் பேசப்படுகிறது. ஒரு நாள் முழுதும் வேலை செய்தால் அது சுமார் ஆறு முதல் எட்டு அணு வரை தான் ஊதியங்

கொடுக்கிறதென்பதே அதற்குக் காரணம். சைக்கிள் பாகங்கள், கடிகாரங்கள், இயந்திர மூலம் இயங்கும் விளையாட்டுக் கருவிகள் முதலியன செய்வது போன்ற, ஜப்பானிய கைத் தொழில்களை விவசாயிகளின் குடிசைகளில் மின்சார சக்தி வசதிகளுடன் ஏற்படுத்துவதென்ற சுலபமான யோசனைகள் கூறப்படுகின்றன. வசதியுள்ள இடங்களில் இந்த யோசனை வரவேற்கத்தகுந்ததே. ஆனால் இந்தக் கைத் தொழில்களால் சிலருக்குத் தான் வேலை கிடைக்கும்.

இந்தக் கைத் தொழில்களை மேற்கொள்கிறவர்கள் இதிலேயே தங்கள் முழு நேரத்தையும் உபயோகிக்க வேண்டும். அவர்கள் தொழில் நுணுக்க ஞானமுள்ளவர்களாகிவிடுகிறார்கள். தங்கள் கைத் தொழிலுக்குத் தேவையான இயந்திர சாதனங்களையும் மூலப் பொருள்களையும் வாங்குவதற்கு அவர்களிடம் போதுமான மூலதனம் வேண்டும். எனவே ஆண்களும், பெண்களும், இளைஞரும், முதியவர்களுமான நம் கோடிக் கணக்கான விவசாய மக்களுக்கு ஓய்வு காலக் கைத் தொழில்களாக இவற்றை நினைக்கவும் முடியாது. அவர்களால் தங்கள் ஏர், கலப்பை, மண்வெட்டி, அரிவாள் முதலிய ஆயுதங்களைக் கைவிடவும் முடியாது.

குடிசையில் பருத்தி கொட்டை நீக்குதல்: நூற்பவரில் அநேகர் தங்கள் சொந்த நிலத்தில் விளைந்த பருத்தியை உபயோகிக்கிறார்கள். சொந்தப் பருத்தி இல்லாதவர்களுக்கு சர்க்கார் ஸ்தாபனங்களிலிருந்து கப்பாஸ் கொடுக்கப்படுகிறது. பஞ்சு கெட்டுப் போகாமல் பருத்தியைக் கொட்டை நீக்க நூற்பவர்களுக்குப் பயிற்சி யளிக்கப்பட்டிருக்கிறது. ஜின்னிங் மில்கள் வெகுதூரத்திலிருப்பதால் அவற்றை எதிர்பார்க்காமலே தங்களுக்கு வேண்டிய பஞ்சைத் தயாரித்துக்கொள்ள கையினால் கொட்டை நீக்கும் கருவி வசதியளிக்கிறது. இதன் மூலம் கொட்டை நீக்கும் கட்டணமும், போக்குவரத்து செலவுகளும் மிச்சப்படுகின்றன.

ஆனல் கையினல் நூல் நூற்பதோ, கடந்த இரு நூற்றாண்டு களுக்கு முன்பு வரை, ஒரு சர்வதேச குடிசைக் கைத் தொழிலாக இருந்து வந்திருக்கிறது. இன்றும் நம் நாட்டில் பல கிராமங்களில், குறிப்பாகப் பருத்தி விளையும் ஜில்லாக்களான கோயம்புத்தூர், ராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கடப்பை, அனந்தப்பூர், குண்டூர், கிழக்கு கோதாவரி, விசாகபட்டணம், முதலிய பிரதேசங் களில், நூல் நூற்பது குடும்ப பரம்பரைத் தொழிலாக விளங்குகிறது. இத் தொழிலைச் சுலபமாகப் பலப்படுத்த முடியும். ராட்டினத்தை, கிராமத்திலுள்ள தச்சு வேலைக்காரரால் கிராமத்திலுள்ள மரங்களைக் கொண்டே ஐந்து ரூபாய்க்குக் குறைந்த விலையில் தயாரித்துவிட முடியும். இதற்கு விசேஷ தொழில் நுணுக்க ஞானம் எதுவும் தேவை யில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, அந்தத் தொழிலாளரின் அத்யாவசியத் தேவைகளில் ஒன்றை அந்தக் கைத் தொழில் உற்பத்தி, பூர்த்தி செய்யும். எனவே இந்தக் குடிசைக் கைத் தொழிலே மிகவும் சிறந்ததும், நம் கிராமப் பொருளாதாரத்துக்குத் தகுந்ததுமாக விருக்கின்றது.

3. சென்னை சர்க்காரின் கதர் அபிவிருத்தித் திட்டம்.

கதர் அபிவிருத்தியில் பயன்படத்தக்க நடவடிக்கைகளை, ராஜ்ய சர்க்கார்களில் முதன் முதலாக எடுத்துக்கொண்ட பெருமை, சென்னை சர்க்காருக்குத்தானென்றல் அது மிகையாகாது.



பஞ்சைச் சுத்தஞ் செய்து பட்டி போடுகிறர்கள்.

1937-ம் ஆண்டு ராஜாஜியைப் பிரதமராகக் கொண்டு முதலாவது காங்கிரஸ் மந்திரி சபை பதவியேற்றதும் சென்னை ஜவுளி விற்பனை ஒழுங்கு முறைச் சட்டம் ஒன்றை வகுத்தனர். அதன்படி ஜவுளி வியாபாரிகளுக்கு லைசென்ஸ் வழங்கும் முறை ஏற்பட்டது. மில் ஜவுளி வியாபாரிகளுக்கும் லைசென்ஸ் கட்டணம் விதிக்கப்பட்டது. அதன் மூலம் கதர் உற்பத்திக்கு ஓரளவு பாதுகாப்பு அளிக்கப்பட்டது. ராஜ்யத்தில் கதரை அபிவிருத்தி செய்வதற்காக அகில இந்திய நூல நூற்போர் சங்கத்துக்கு மானியங் கொடுக்கும் முறையையும் சர்க்கார் மேற்கொண்டனர்.

பழைய—புதிய ராட்டினங்கள் : மூன்றுவிதமான ராட்டினங்கள் படத்தில் காணப்படுகின்றன. இடது ஓரத்திலுள்ளது, துரிதச் சக்கரம் அமைக்கப்பட்ட புது ரக ராட்டினம். மத்தியிலுள்ளது பழைய ரக ராட்டினங்களுக்குள் அதிகமாய் உபயோகப் படக்கூடியது. வலது ஓரத்திலிருப்பது பழைய ரக ராட்டினத்தில் துரிதச் சக்கரம் பொருத்தப்பட்டது.

மணமக்களுக்கு ராட்டினத்தை சீதனமாகக் கொடுக்கும் வழக்கம் இன்னும் சில ஜில்லாக்களில் இருந்து வருகிறது. ராட்டினம் குல தனங்களில் ஒன்ருய்க் கருதப் படுகிறது. பழைய ரக ராட்டினத்தில் நூற்றுப் பழகியவர்கள் புது ரக ராட்டினத்தை உபயோகிக்க மறுக்கிருர்கள். ஆனால் அந்தப் பழைய ராட்டினத்தில் துரிதச் சக்கரத் தைப் பொருத்தச் சம்மதிக்கிருர்கள்.

பழைய ராட்டினங்கள் செங்குத்தாக அமைக்கப்பட்ட சக்கரத்தையுடையன. துரிதச் சக்கரம் பொருத்தப்பட்டு அபிவிருத்தியான ராட்டினத்தைப் போல் அவ்வளவு திறம்பட அதைக் கொண்டு நூற்க முடியாது. பழைய ரக ராட்டினத்திஸ் மணிக்கு 300 கெஜம் நூல் நூற்பவர், துரிதச் சக்கரம் பொருத்தப்பட்டதில் மணிக்கு 450 கெஜம் நூற்க முடியும்.

ராஜ்யத்தில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நூல் நூற்பு ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கவும், ராட்டினங்கள் விநியோகிக்கவும் அந்த மானியங்கள் உபயோகிக்கப்பட்டன.

1946-ம் ஆண்டில் தீவிர கதர் அபிவிருத்தித் திட்டம் வகுக்கப்பட்டது. இது சர்க்கார் ஏஜண்டுகளின் நேரடிமேற்பார்வையில் நடத்தப்படும் முதலாவது விரிவான கதர் அபிவிருத்தித் திட்டமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில், கதர் ஜவுளியால் அந்தப் பிரதேசம் ஜவுளியில் சுயநிறைவுள்ளதாக் கப்படவேண்டுமென்ற நோக்கத்தில்,



முதியவர்க்குகந்த தொழில் : முதியவர்கள் தங்கள் குடும்பத்துக்குப் பாரமாயிருக்க வேண்டியதில்லை. படத்தில் காணப்படும் ஹரிஜன மூதாட்டியின் வயது சுமார் 90. ராட்டினத்தில் நூற்பது மூலம் தினம் 6 அணுவுக்கு அதிகம் அவர் சம்பாதிக்கிறார்.

கதர் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியை இந்தத் திட்டம் குறிக்கோளாகக்கொண்டது.

1947-ம் வருஷத்திலிருந்து அடியிற்கண்ட ஏழு இடங்களில் இந்தத் திட்டம் நடைபெற்று வருகிறது.

ஸ்தாபனத்தின் பெயர்.	ஜில்லாவும், இத் திட்டத்தில் அடங்கியுள்ள கிராமங்களின் எண்ணிக்கையும்.
(1)	(2)
1. அவனுசி	கோயம்புத்தூர் ஜில்லாவில் 28 கிராமங்கள்.
2. வெள்ளக்கோயில் ..	கோயம்புத்தூர் ஜில்லாவில் 12 கிராமங்கள்.
	திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் 9 கிராமங்கள்.
3. சின்னசேலம் ..	சேலம் ஜில்லாவில் .. 7 கிராமங்கள்.
	தென் ஆற்காடு ஜில்லாவில் 61 கிராமங்கள்.
	திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் 4 கிராமங்கள்.
4. பய்யனூர் ..	மலையாளம் ஜில்லாவில் 9 கிராமங்கள்.
	தென் கன்னட ஜில்லாவில் 6 கிராமங்கள்.
5. சந்தானுதாலபாடு ..	குண்டூர் ஜில்லாவில் 21 கிராமங்கள்.
6. எர்ரகொண்டபாலம்.	கர்நூல் ஜில்லாவில் .. 19 கிராமங்கள்.
7. கொட்டௌரெட்லா.	விசாகப்பட்டணம் ஜில்லாவில் 18 கிராமங்கள்.

இந்த ஸ்தாபனங்களைச் சேர்ந்த கிராமங்களிலுள்ள மக்கள் தங்களுக்குத் தேவையான கதர் துணிகளை உற்பத்தி செய்து உபயோகித்துக் கொள்ளவேண்டிய வசதிகளைச் சர்க்கார் செய்கின்றனர்.

தானே பருத்தி பயிரிட்டு, அதில் விளைந்த பருத்தியைப் பொறுக்கி எடுத்து, அந்தப் பஞ்சிலிருந்து தன் வீட்டிலேயே நூல் நூற்று, அந்த நூலைக்கொண்டு நெய்யப்படும் துணிதான் உண்மையான கதராகும். பருத்திச் செடி பயிரிடுவதிலிருந்தே கதர் உற்பத்தி ஆரம்பமாகிறது. அங்கீகரிக்கப்பட்ட நல்ல ரக பருத்தி வித்துக்களை, கதர் அபிவிருத்தி ஸ்தாபனங்கள், விவசாயிகளுக்கு விநியோகித்து அவர்களைத் தங்கள் சொந்தத்தில் பருத்தி சாகுபடி செய்யத் தூண்டும். ஆனால் தற்போது பெரும்பாலான நூல் நூற்பாளர்கள் பருத்தி பயிரிடவில்லையாதலால் சர்க்கார் அவர்களுக்குப் பஞ்சு விநியோகிக்கவேண்டியிருக்கிறது. எனவே பருத்தி பொறுக்கு காலத்தில் சர்க்கார் பருத்தியைச் சேகரித்து கதர் அபிவிருத்தி ஸ்தாபனங்களில் வைத்திருந்து, நூற்பவர்கள் கேட்கும்பொழுது அவர்களுக்கு, வாங்கிய விலைக்கு விநியோகிக்கிறார்கள்.

நூல் நூற்பவர்கள் தங்கள் வீட்டிலேயே பருத்தியைக் கொட்டை நீக்கி சுத்தப்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். கையினால் கொட்டை நீக்கும் கருவிகளும், பஞ்சு சுத்தம் செய்யும் வில்களும், செய்த விலைக்கு அவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. வில்லுக்கு வேண்டிய நாண் நரம்பு, மூன்றில் ஒரு பங்கு விலைக்குக் கொடுக்கப்படுகிறது.

நூல் நூற்க விரும்புகிறவர்களுக்கு, முன் பணம் வாங்காமலே ராட்டினம் கொடுக்கப்படுகிறது. அவர் நூற்கும் நூலை வாங்குவதன் மூலமே ராட்டினத்தின் விலை பல தவணைகளாய் வசூலித்துக் கொள்ளப்படுகிறது.

பருத்தியைக் கொட்டை நீக்கவும், சுத்தஞ் செய்யவும், பட்டிகள் போடவும் நூல் நூற்கவும் கற்றுக்கொடுக்க பயிற்சிபெற்ற தொண்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

அந்தந்தக் கிராமத்தில் நூற்கப்படும் நூல் முழுவதையும் அங்கேயே கதராடையாக நெசவு செய்யும்பொருட்டு, தற்போது நெசவாளர்கள் இல்லாத கிராமங்களுக்கு நெசவாளர்கள் அனுப்பப்படுகிறார்கள்.

தாங்கள் நூற்ற நூலைக்கொண்டு தங்களுக்கு வேண்டிய கதர் துணி களைத் தயாரித்துக்கொண்டதுபோக உபரியாயுள்ள நூலை கதர் ஸ்தாபன அதிகாரிகளிடம் விற்றுவிடலாம். அந்த நூலைக்கொண்டு கதர் துணி தயாரித்து நூற்கும் தொழிலில் ஈடுபடாத குடும்பத்தினருக்கு விற்க கதர் ஸ்தாபன அதிகாரிகள் ஏற்பாடு செய்வார்கள்.

மில் நூலைக்கொண்டு நெசவு செய்பவர்களைக்காட்டிலும், கதர் துணி நெசவாளர்களுக்கு அதிகமான சம்பளங் கொடுக்கவேண்டும். கதர் ஜவுளிகளின் விலை அதிகமாயிருப்பதின் காரணங்களில் இதுவு மொன்று. நூல் நூற்பவர்களிடையே கதர் துணி உபயோகம் சுய

கதர் அபிவிருத்தி ஸ்தாபனம்: நூற்பவர்கள் தாங்கள் நூற்ற நூலைக் கொடுத்துவிட்டு ரொக்கமோ, கதர் துணியோ வாங்குகிறார்கள். நூற்பதற்குப் பஞ்சும் வாங்கிக் கொள்வார்கள்.

நிறைவுள்ளதா யிருக்கும்படி செய்யும் நோக்கத்தில் அவர்கள் தயாரிக்கும் கதர் ஜவுளியில் கெஜத்துக்கு $2\frac{1}{2}$ முதல் 4 அணுவரை சர்க்கார் மானியங் கொடுக்கிருர்கள். நெசவாளர்களுக்குக் கொடுக்கப் படும் அதிக சம்பளத்தை இந்த மானியம் ஈடு செய்கிறது. மானிய முறை ஆரம்பத்திலிருந்து ஆண்டுதோறும் கொடுக்கப்பட்ட தொகை விவரம் வருமாறு :—

வருஷம்.	தொகை. ரூ.	அ.	பை.
1946-47	277	4	0
1947-48	44,222	3	3
1948-49	51,993	4	0
1949-50	44,456	13	6
1950-51	43,770	15	3
1951-52-ல் 1952 டிசம்பர் முடிய	50,255	2	6

ஒவ்வொரு கதர் ஸ்தாபனத்துக்கும் ஒரு கதர் கமிட்டியும், ஒவ்வொரு கிராமத்துக்கும் அல்லது பல கிராமங்கள் சேர்ந்த தொகுதி ஒவ்வொன் றுக்கும் ஒரு கிராம கதர் கமிட்டியும் அமைக்கப்பட்டுள்ளன. வீடு வீடாய்ச் சென்று கதர் அபிவிருத்தித் திட்டம் பற்றிப் பேசி அத் திட்டத்தில் மக்களுக்குப் பற்றுண்டாகும்படி செய்து, ஒவ்வொரு

கதர் ஸ்தாபனத்தில் அதிகபட்ச வேலை நடக்கும் ஒரு நாள் : சில ஸ்தாபனங்களில் 300 நூற்பவர்கள் வரை இருக்கிருர்கள். நூற்பவர்கள் பெரும்பாலும் கதர் புடவையே கட்டியிருப்பதைப் படத்தில் காணலாம்.

குடும்பத்திலும் ஒருவராவது நூல் நூற்கும்படி செய்யவேண்டியது இந்தக் கமிட்டிகளின் அலுவலாகும்.

"ஒவ்வொரு வீட்டிலும் ஒரு ராட்டினமாவது இருக்கவேண்டும்; ஒவ்வொரு தெருவிலும் ஒரு தறியாவது இருக்கவேண்டும்" என்ற லட்சியம் வெகு தொலையில் இருப்பதாய்க் காணப்பட்டபோதிலும் அதை நோக்கி ஏற்படும் முன்னேற்றம், ஊக்கம் அளிக்கக்கூடியதா யிருக்கின்றது.

கதர்த் திட்டம் அமலில் உள்ள ஏழு 'சென்டர்'களில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை 84,636.

	திட்டம் ஆரம்பிக் கப்பட்ட பொழுது.	1951-ம் ஸு மார்ச்சு மீ 31உயில்.	1951-ம் ஸு டிசம்பர் மீ 31உயில்.
எல்லா சென்டர்களிலும் உள்ள மொத்த நூற் பாளர்கள்.	26,459	33,578	43,627
அங்குள்ள தறிகள் ..	..	1,225	1,937

1950–51-ம் வருஷத்துடன் முடிவான முதல் நான்கு ஆண்டுகளில் இந்த கதர் சென்டர்களில் வருஷத்தில் சராசரி $6\frac{1}{2}$ லட்சம் கெஜம் கதர் ஜவுளி உற்பத்தியாயிற்று. 1951–52-ம் வருஷத்தில் 1952 பிப்ரவரி முடியக் கிடைத்த புள்ளி விவரத்திலிருந்து அந்த வருஷத்தில் கதர் உற்பத்தி இரண்டு மடங்காகுமென்று தெரிகிறது. சர்க்கார் தரப்பில் உற்பத்தியான, கதர் ஜவுளி தவிர, கதர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட நூற்பாளர்கள் தயார் செய்தது சுமார் 3 லட்சம் கெஜங்க ளாகும்.

4. கையினால் நூற்பதும், கைத்தறி நெசவும்.

கைத்தறி நெசவுக்கு, குறையாதபடி மில் நூல் எப்பொழுதும் கிடைத் துக்கொண்டிருக்குமென்று நம்புவது தவறானதென்று சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னரே காந்திஜி எச்சரித்தார். கைத்தறி நெசவும், மில் நெசவும் ஒன்றுக்கொன்று ஆதரவான தொழில்களல்லவென் றும், பரஸ்பரம் விரோத மனப்பான்மையுடையனவென்றும் அவர் குறிப்பிட்டார். 'தொடர்ந்து தங்கள் இயந்திர சாதனங்களை அபி விருத்தி செய்வதும், சிறிய கைத்தொழில்களில் ஆக்ரமிப்புச் செய் வதும், பெரிய கைத்தொழிலாளர்களின் அபிலாஷையாக விருக்கிறது. அதற்காகவே அவர்கள் இருப்பதாகவும் சொல்லலாம்,' என்று அவர் எடுத்துக்காட்டினார்.

அவர் எச்சரித்தது நாளாவட்டத்தில் உண்மை என நிரூபிக்கப்பட் டுள்ளது. நூல் நூற்கும் மில்கள் அதிகரித்தும் கைத்தறி நெசவாள ருக்குத் தேவையான நூல் கிடைப்பது அரிதாயிருக்கிறது. காரணம், நெசவு மில்களில் தங்கள் நெசவு வேலையை அதிகப்படுத்திவிட்டார்கள்.

கையினால் நூற்கும் நூலைத்தான் தங்கள் எதிர்காலம் நம்பியிருக்கிறதென்பதைக் கைத்தறி நெசவாளர்களே உணர ஆரம்பித்துவிட்டார்கள்.

போதுமான மில் நூல் கிடைக்காமல் கைத்தறி நெசவாளர்கள் சமீபத்தில் பட்ட கஷ்டத்தைப் பார்த்த சர்க்கார், கதர் உற்பத்திக்கான அதிக 'சென்டர்கள்' அமைப்பதுபற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

நூல் பரிசோதனை : கதர் அபிவிருத்தி ஸ்தாபனத்துக்கு கொண்டுவரப்படும் நூல், சரியானபடி முறுக்கேறியதாயும் பலம் பொருந்தியதாயும் இருக்கிறதாவென்று, பயிற்சி பெற்ற தொண்டர்களால் கவனத்துடன் பரிசோதனை செய்யப்படுகிறது.

சாதாரணமாய், கிராமத்திலேயே தயார் செய்யப்பட்ட ஒரு கருவியாலேயே நூல் பரீக்ஷிக்கப்படுகிறது. ஒரு ஸ்டான்டின் உயரேயுள்ள ஒரு புனல் நிறைய மணல் போடப்பட்டிருக்கிறது. புனலின் அடித்துவாரத்துக்குக் கீழே ஒரு தட்டு காணப்படுகிறது. அந்தத் தட்டு பரீக்ஷிக்கப்படவேண்டிய நூலில் கட்டப்பட்டிருக்கிறது. புனலிலுள்ள மணலை சிறிது சிறிதாய் தட்டில் விழும்படி செய்யப்படுகிறது. மணல் விழ விழ தட்டைத் தாங்கும் நூல் இழுக்கப்பட்டு இறுதியாய் அறுந்து விடுகிறது. உடனே மணல் விழுவதும் நின்று விடுகிறது. பின் தட்டிலுள்ள மணலை நிறுத்து நூலின் பலத்தை கணக்கிடுவார்கள்.

5. கதர் அபிவிருத்தி விஸ்தரிப்புத் திட்டம்.

கதர் அபிவிருத்தி விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ், இதுவரை கதர் உற்பத்தியே தலைகாட்டாத பிரதேசங்களிலும் கதர் உற்பத்தித் திட்டம் அமல் நடத்தப்படும். அம்மாதிரியான பிரதேசங்களில் தீவிர கதர் உற்பத்தி ஸ்தாபனத்தை அமைப்பதற்குமுன், முதலாவதாக மக்களுக்குக் கதர் உற்பத்தியைப்பற்றி நன்கு தெரியும்படி செய்து, ராட்டினங்களை அங்கு விநியோகிக்கவேண்டியது அவசியம். விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ராட்டினங்கள் அங்கு பாதி விலைக்குக் கொடுக்கப்படும். பருத்தியும், மற்றும் கொட்டை நீக்க, சுத்தம் செய்ய, பட்டி போடவேண்டிய கருவிகளும், உற்பத்தி விலைக்குக் கொடுக்கப்படும். நூற்க ஆரம்பிப்பவர்களுக்குப் பயிற்சியளிக்க ஒரு கதர் தொண்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார். நூற்ற நூலை நெசவு செய்யவும் அவர் ஏற்பாடு செய்வார். இந்தத் திட்டத்தின்படி நூல் நூற்பவர்களுக்கு ஒரு மானியமும் கொடுக்கப்படுகிறது. அதன் மூலம் தாங்கள் நூற்ற நூலைக்கொண்டு அவர்கள் கதர்த் துணி தயாரித்துக்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.



தறியில் வேலை: பய்யனூர் கதர் அபிவிருத்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்த நீலேஷ்வரம் ஸ்தாபனத்தில் நெசவாளர் தறியில் வேலை செய்கின்றனர். பெண்களும் நெய்கின்றனர்—நெசவு வேலைக்கு வேண்டிய சாமான்கள், அவசியமான இடங்களில், சர்க்கார் செலவில் கொடுக்கப்படுகின்றன.

அடியிற்கண்ட பிர்க்காக்களில் கதர் அபிவிருத்தி விஸ்தரிப்புத் திட்டம் அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அனந்தப்பூர் ஜில்லா—
பிர்க்காக்கள் : ஹிந்துப்பூர்.
மடக்காசிரா.
பரிகி.

கடப்பை ஜில்லா—
பிர்க்காக்கள் : புரோதத்தூர்.
சப்பாட்.
அர்க்கடவே முலா.

கிழக்கு கோதாவரி ஜில்லா—
பிர்க்காக்கள் : ராஜமஹேந்திர புரம்.
ரகுதேவபுரம்.
புருகுபூடி.

மேற்கு கோதாவரி ஜில்லா—
பிர்க்காக்கள் : டென்டுலூரு.
தர்மாஜிகூடம்.
காமவரப்புக் கோட்டா.
போலாவரம்.

குண்டூர் ஜில்லா—
பிர்க்காக்கள் : ஓங்கோல்.
அம்மனப்ரோல்.

பெல்லாரி ஜில்லா—
பிர்க்காக்கள் : ஆலூர்.
சிப்பகிரி.

தென் ஆற்காடு ஜில்லா—
பிர்க்காக்கள் : காடாம்புலியூர்.
திருநாவலூர்.

திருச்சிராப்பள்ளி ஜில்லா—
பிர்க்காக்கள் : வெங்கலம்.
வலிகண்டபுரம்.
தாத்தய்யங்கார் பேட்டை.

கர்நூல் ஜில்லா—
பிர்க்காக்கள் : திரிபுராந்தகம்.

ஸ்ரீகாகுளம் ஜில்லா—
பிர்க்காக்கள் : காரா.
ஸ்ரீகாகுளம்.
அமுதலவலசா.

பெண் தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

நெல்லூர் ஜில்லா—

பிர்க்காக்கள் : கணுபூர்.

ராமநாதபுரம் ஜில்லா—

பிர்க்காக்கள் : மல்லி.
நத்தம்பட்டி.
எதிர்க்கோட்டை.
மங்களம்.
தர்சக்குடி.
நெடுங்குளம்.
கிருஷ்ணப்பேரி.
வேடப்பட்டி.
இஞ்சார்.
திருததங்கல்.
ஆனையூர்.
நமஸ்காரத்தான் பட்டி.

சேலம் ஜில்லா—

பிர்க்காக்கள் : வீரபாண்டி.
வீரகணர்.
தலைவாசல்.
தியாகனூர்.
மம்புடி.

சேலம் ஜில்லா—

பிர்க்காக்கள் : காமக்கா பாளையம்.
அருவட்டி அக்கிரகாரம்.
தேவியாகுறிச்சி.
வடகுமரி.
தென்குமரி.
சார்வாய்.
நட்டகரை.
கங்கவல்லி.
அனயாம்பட்டி.
பச்சமலை.

தஞ்சாவூர் ஜில்லா—

பிர்க்காக்கள் : சாலியமங்கலம்.
வேதாரண்யம்.
தலைநாயர்.

திருநெல்வேலி ஜில்லா—

பிர்க்காக்கள் : பழங்கோட்டை.
நீவிதநல்லூர்.
கலிங்கபட்டி.
கார்சாத்தம்.

திருநெல்வேலி ஜில்லா— தொடர்ச்சி.

திருவேங்கடம்.
வரகனூர்.
வெள்ளக்குளம்.
சங்குபட்டி.
மெய்ப்பாறை.
மணலூர்.
சத்திரங் கொண்டான்.
கரிசல்குளம்.
பெருநகோட்டூர்.
புன்னைவனம்.
வீரசிகாமணி.
கீழவீரசிகாமணி.
கல்பகுளம்.
வடக்குப் புதூர்.
தெற்கு சஙகரன் கோயில்.
பெரியூர்.
பெரும்பத்து.
குவளைக்கண்ணி.
வயலி.
கரிவலம்வந்த நல்லூர்.

செங்கற்பட்டு ஜில்லா—

பிர்க்காக்கள் : திருவள்ளூர்.
மாப்பேடு.
பந்தூர்.

மலையாளம் ஜில்லா—

பிர்க்காக்கள் : தலைச்சேரி.
மட்டனூர்.
குததுபபரம்ப.

தென் கன்னடம் ஜில்லா—

பிர்க்கா : கும்ளா.

கோயம்புத்தூர் ஜில்லா—

பிர்க்கா : பல்லடம்.

மதுரை ஜில்லா—

பிர்க்கா : திருமங்கலம்.

வட ஆற்காடு ஜில்லா—

பிர்க்காக்கள் : கலசபாக்கம்.
துரிஞ்சபுரம்.
கடலாடி.

101451

6. சில கேள்விகளும் பதிலும்

கிராம மக்களின் க்ஷேமநலத்துக்கு கதர், உண்மையில் ஏதாவது செய்திருக்கிறதா ? கிராம மக்களின் வேலையில்லாப் பிரச்னையை நிவர்த்திக்க அது ஏதாவது உதவி புரிந்திருக்கிறதா ?

...RE, MADRAS...

கதரைப் பற்றிக் குறை சொல்லுவோர் கேட்கும் சில முக்கிய கேள்விகளில் இவையும் உள்ளன. சாந்தனுதாலபாடு, சாக்கா கதர் ஸ்தாபனத்தின், குருவரெட்டிபாலம் கிளை ஸ்தாபனத்திலுள்ள குடும்பங்களில் ஆங்காங்கு பொறுக்கி எடுத்துப் பரிசீலனை செய்த சில குடும்பங்கள் சம்பந்தமான தகவல்கள், மேலே கூறப்பட்ட கேள்விகளுக்கு விடைபகரும்.

நெ. 1. குடும்பம் :—குருவரெட்டிபாலம் கிராமம், ஓங்கோல் த்தாலுகா : இது ஒரு விவசாயியின் குடும்பம். அவருக்கு 60 ஏக்கர் புன்செய் நிலமிருக்கிறது. 25 ஏக்கரில் புகையிலையும், 20 ஏக்கரில் உணவு தானியங்களும், 15 ஏக்கரில் சோளமும் இதர மாட்டுத் தீவனப் பயிர்களும் சாகுபடிசெய்கிருர். அந்தக் குடும்பத்தில் மொத்தம் 5 ஆண்களும், 6 பெண்களும், ஒரு குழந்தையும் இருக்கிறாகள். விவசாயப் பருவகாலத்தில் ஆண்களும் பெண்களும் வயலில் வேலை செய்கிருர்கள். பண்ணை வேலையாட்களும் இருவர் இருக்கிருர்கள். இத்தனை பேர் இருந்தும் விதைப்பு, அறுவடை காலங்களில் கூலிக்கு ஆட்களை அமர்த்தாமல் பண்ணை வேலையைச் செய்யச் சாத்தியமாவதில்லை.

பயிற்சி மாணவர்கள், பஞ்சைக் கொட்டை நீக்குவது முதல் அதைத் துணியாக்குகிற வரையிலுள்ள பல வேலைகளைச் செய்து காட்டுகிருர்கள்.

பண்ணையில் 6 பசுக்களும், 4 காளைகளும், இரண்டு எருமைகளும் உள்ளன. அந்தக் குடும்பத்தினரும், அவர்களுடைய இரு நிரந்தரப் பண்ணையாட்களுமாக, இந்தக் கால்நடைகளையும் கவனித்துக்கொள்ள வேண்டும்.

அந்தக் கிராமத்தில் அரிசி மில்லோ மாவு மில்லோ கிடையாது. எல்லா அரைப்பு வேலைகளும் வீட்டில்தான் செய்யப்படவேண்டும். புகையிலையைப் பதனிடும் வேலையும் பண்ணையில்தான் செய்யப்படுகிறது. வீட்டுக்கு வேண்டிய தண்ணீரைக் கிணற்றிலிருந்துதான் எடுக்கவேண்டும். இந்த வேலைகளை எல்லாம் பார்த்தால் அந்தக் குடும்பத்தினருக்கு ஓய்வு நேரமே இருக்க முடியாதென நினைக்கத்தோன்றும். ஆனால் மார்ச்சிலிருந்து செப்டம்பர் வரை பண்ணை வேலையும் வீட்டு வேலையும் மிகவும் குறைவாய் இருக்கிறதென்று அந்தக் குடும்பத்தினரே ஒப்புக் கொள்கின்றனர். நூல் நூற்பு வேலையை மேற்கொள்ளாவிட்டால் நாளில் பாதியை வீணாகத்தான் கழிக்க வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள்.

அந்தக் குடும்பத்திலுள்ள எல்லாப் பெண்களுக்கும் நூல் நூற்கத் தெரியும். அவர்களிடம் 5 ராட்டினங்கள் இருக்கின்றன. 1951 மார்ச் முதல் செப்டம்பர் வரை அந்தக் குடும்பத்தினர் 800 சிட்டம் நூல் வரை நூற்றிருக்கின்றனர். அந்தக் குடும்பத்தினருக்கு வருஷத்தில் 250 கெஜம் ஜவுளி தேவை. அந்த 250 கெஜந்துணியை நெய்வதற்கு வேண்டிய அளவு நூலை விட்டிலேயே நூற்க அவர்கள் பழகியிருக் கிறார்கள்.

நெ. 2. குடும்பம் :—ருத்ராவரம் கிராமம், சாந்தனுதாலபாடு ஸ்தாபனம். இந்த விவசாயிக்கு 7 எக்கர் புன்செய் நிலம் இருக்கிறது. புருஷன், மனைவி, ஒரு புத்திரன் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு எக்கரில் பருத்தியையும் வேர்க்கடலையையும் கலந்து விதைக் கிறார்கள். சென்ற பருவத்தில் விளைந்த பருத்தி 12 பவுண்ட் லின்ட் கொடுத்தது. 1951 செப்டம்பர் வரை அந்தக் குடும்பப் பெண் 30 கெஜங் கதர் துணி நெய்வதற்குப் போதுமான நூல் நூற்றிருந்தாள். அதில் 20 கெஜந்துணி நெய்யப்பட்டு விட்டது. இன்னும் 20 கெஜந் துணிக் குப்போதுமான நூலை நவம்பர் மாதத்துக்குள் நூற்கமுடியுமென்று அவள் கூறுகிறாள். இந்த வீட்டில் காணப்படும் துணி எல்லாம் வீட்டில் செய்யப்பட்டவையாகவே இருக்கிறது. இந்தக் குடும்பத்தினர் துணிக் காக பணஞ்செலவு செய்யவேண்டியதே ஏற்படவில்லை. ராட்டினத்தின் மூலம், தான் சேமித்த பணத்தைக்கொண்டு செய்யப்பட்ட பொன் நகைகளைப் பார்த்து அவள் பெருமைப் பட்டுக்கொள்கிறாள்.

நெ. 3. குடும்பம் :—ருத்ராவரம் கிராமம், சாந்தனுதாலபாடு ஸ்தாபனம்: இந்த விவசாயிக்கு 9 எக்கர் நிலமிருக்கிறது. சோளமும், நெல்லும் பயிரிடுகிறார். புருஷன், மனைவி மற்றும் இரு கிழவிகள் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இந்தப் பெண்கள் நூல் நூற் பதில்லை. நிலத்தில் 8 மாதந்தான் வேலை இருக்கிறதென்று அந்த விவசாயியே ஒப்புக்கொள்கிறார். அப்படியிருந்தும் அவர்கள் ஏன் ஓய்வு வேளையில் நூற்பதில்லை என்பதற்கு அவரால் காரணங் கூறமுடிய வில்லை.

நெ. 4. குடும்பம் :—ருத்ராவரம் கிராமம். இந்தக் குடும்பத்துக்கு நிலமே கிடையாது. அறுவடை காலங்களில் புளி, மிளகாய் போன்ற மளிகைச் சாமான்களை விற்று பண்ட மாற்றாக உணவு தானியங்களை குடும்ப ஆண் மகன் பெறுவார். மாதம் சுமார் ரூ. 50 கிடைக்கும். பெண் ஒரு எருமை மாட்டை வளர்த்து வருகிறாள். வருஷத்தில் 4 மாதங்களுக்கு நல்ல லாபகரமான எவ்வித வேலையுமில்லை என்று அவர்கள் இருவரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் இது வரை நூல் நூற்கும் வேலையைப் பற்றி நினைத்ததேயில்லை.

நெ. 5, 6. குடும்பங்கள் :—ருத்ராவரம் கிராமம். இந்த இரண்டும் முஸ்லீம் குடும்பங்கள். குடும்பத்தினருக்கு பருத்தி சுத்தம் செய்வது தொழில். முதற் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு கிழவரும் அவர் மகனும், இரண்டாவது குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வாலிபனும் சேர்ந்து தங்கள் தொழிலை நடத்தினார்கள். கிராமத்திலுள்ள எல்லா விவசாயிகளின் வீடுகளிலுமுள்ள பருத்தியை இவர்கள் சுத்தஞ் செய்து கொடுத் தார்கள். இரண்டு வருஷங்களுக்கு முன்னால் அந்தக் கிழவர் இறந்து போனார். அதன் பிறகு அந்த இரு இளைஞர்களால் தங்கள் தொழிலைத் திருப்திகரமாய்ச் செய்ய முடியவில்லை. பருத்தி சுத்தஞ் செய்யும் வில்லை உபயோகமற்ற கட்டைகளுடன் போட்டுவிட்டார்கள். இருவரும் இப்பொழுது விவசாயத் தொழிலாளராய் கூலிக்கு வேலை செய்து வருகிறார்கள். அந்தக் குடும்பங்களிலுள்ள பெண்களுக்கு நூற்கத் தெரியும். ஆனால் ராட்டினங் கிடையாது. குடும்பங்கள வறுமையுற்றி ருக்கின்றன. ஏன் நூற்கக்கூடாதென்று கேட்டால், நூற்பதற்குப் பஞ்சு வாங்கப் பணமில்லை என்று சொல்கிறார்கள்.

நெ. 1, 2 குடும்பங்களில் வீட்டில் நூற்ற நூலைக்கொண்டு கதர் துணி தயாரிப்பதை குடும்ப பரம்பரையாக நடத்தி வருகின்றனர். குடும் பத்தின் இதர புனித பரம்பரைப் பழக்க வழக்கங்களைப் போலவே இதையும் கருதுகின்றனர். மற்றக் குடும்பங்களில் இந்தப் பழக்கம் மேற்கொள்ளப்படவில்லை. நெ. 1 குடும்பத்தில், பெரிய பண்ணை யிருந்தும், அங்குள்ள வேலைகள் போக அவர்களுக்கு 250 கெஜம் கதர் துணி நெய்வதற்கான நூல் நூற்க அவகாசமிருந்திருப்பது, கிராமாந் திரங்களில் மக்களுக்குள்ள உற்பத்தி சக்தியைக்காட்டுகிறது. தற்போது செய்யவேண்டியதெல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் நூற்புப் பழக்கத்தை உயிர்ப்பிக்கவேண்டும்.

நெ. 3 முதல் 6-வது குடும்பங்களின் நிலைமை, ராட்டினங்களை வீட்டுக்கு வீடு, ஒரு திட்ட முறையில் விநியோகிக்கவேண்டியதின் அவசி யத்தைக் குறிப்பிடுகிறது. அத்துடன் பஞ்சும் விநியோகிக்கவேண்டும். கதர் உற்பத்தி சம்பந்தமாய் பிரசாரமும் செய்யவேண்டும்.

7. பஞ்சு சுயநிறைவுள்ளதாக்க.

கோயில் குண்ட்லா கதர் அபிவிருத்தி ஸ்தாபனம் மட்டும் தன் தேவைக்கு அதிகமான பருத்தியை உற்பத்தி செய்கிறது. மற்ற ஸ்தாபனங்களில் உற்பத்தி செய்யப்படும் பருத்தி அங்குள்ளவர்களின் உபயோகத்துக்குப் போதுமானதாயில்லை. வெளியிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. பஞ்சு சம்பந்தப்பட்டவரையில் ஒவ்வொரு ஸ்தாபனமும் சுயநிறைவுள்ளதாக ஏற்படாதவரையில் கதர் அபி

விருத்தி நன்கு பலப்பட்ட முயற்சியாக இருக்க முடியாது. எனவே ஸ்தாபனகளைச் சேர்ந்த விவசாயிகள் அதிகமான பருத்தியைப் பயிரிடும் படி ஊக்குவிக்கப்படுகிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவில் கே (K) 5 கருங்கண்ணி, விசாகப்பட்டணம், கிழக்கு கோதவரி ஜில்லாக்களில் (H) 420 போன்ற அங்கீகரிக்கப்பட்ட பருத்தி வித்துக்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. அத்துடன் நல்ல முறையில் பயிரிட வேண்டிய விதமும் விவசாயிகளுக்கு போதிக்கப்படுகிறது. விவசாயி களுக்கு பட்டிகளுக்குப் பதில் பருத்தி கப்பாஸை விநியோகிக்கிறார்கள். அதன் மூலம் நூல் நூற்பவர்களுக்கு விதைகளும் கிடைக்கின்றன. அது பருத்தி பயிரிட உபயோகமாகும்.

நிலமுள்ள, நூல் நூற்பவர்கள்தான் அந்த விதைகளைப் பயிரிட முடியும். நிலமுள்ளவர்களிலும், பலர் தங்கள் நிலங்களை இதர பயிர் களிலிருந்து பருத்திக்கு மாற்ற கஷ்டப்படுகிறார்கள். தென் ஆப்பிரிக் காவில் விளையும், வருஷ முழுதும் பயிரிடத்தக்க பருத்திரகங்களை ராஜ்ய விவசாய இலாகா பரீக்ஷை செய்து கொண்டிருக்கின்றனர். அவற்றில் 'மோகோ', 'கியூப்ரடின்ஹோர்' ஆகிய இரண்டு ரகங்கள் நம் நாட்டில் வீடுகளின் கொல்லைபபுறங்களிலும், காம்பௌண்டுகளிலும், தோப்பு களிலுள்ள காலியிடங்களிலும் பயிரிடத் தகுந்தவையாக இருக்கின்றன. நிழலில் கூட வளரச் சக்தியுள்ளதாயிருப்பதால் இவற்றை தோட்டங் களிலும் தென்னந்தோப்புகளிலும் துணைப்பயிர்களாய் உற்பத்தி செய்யலாம். தனித்தனித் திட்டுக்களாய் பயிர் செய்தால் இவை பூச்சி புழுக்களால் கூடப்பாதிக்கப்படுவதில்லை.

பல ஸ்தாபனங்களிலும் இவற்றை பயிரிட்டு விவசாய இலாகா செய்த பரீக்ஷை விவரங்கள் வருமாறு :—

ரகங்கள்	பூப்பூப்பதற்கு ஆன தினங்கள்: சர்க்கார்ஸ்	ராயலஸீமா	மத்திய ஜில்லாக்கள்	மேற்குக் கடற்கரை	தென் ஜில்லாக்கள்	சராசரி மதிப்பு: ஈக்கல் எடுத்த பருத்தி நீளம் மில்லி மீட்டர்	கொட்டை நீக்கிய சதவிகிதம்
மோகோ ..	130	80	90	80	80	31	28
கியூப்ர டின்ஹோ.	130	80	90	80	80	24	34

பூச்சிகளும் நோய்களும் ..	அதிகம் பாதிப் பதில்லை	ஜாஸிட் அட்டாக்	பூச்சி இல்லை.

பருத்தி விளையாத பிரதேசங்களிலும், வீட்டு காம்பௌண்டுகளிலும், தோட்டங்களிலும் கால்நடைகள் வராத இதர காலி இடங்களிலும் இந்த ரக பருத்திகளை உற்பத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாய் ஏற்படலாம். எல்லா கதர் அபிவிருத்தி ஸ்தாபனங்களிலும் இந்த ரக

பருத்திகளை உற்பத்தி செய்ய விரும்புகிறவர்களுக்கு விதைகள் விநியோகிக்கப்படுகின்றன.

சின்ன சேலத்திலுள்ள தீவிர கதர் அபிவிருத்தி ஸ்தாபனத்திற்கு பஞ்சு விநியோகிக்கும் வகையில் 600 ஏக்கர் தரிசு நிலத்தில் கருங்கண்ணி பருத்தியைப் பயிர் செய்ய ஒரு ஆரம்ப திட்டத்தை சர்க்கார் அங்கீகரித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் கீழ், பருத்தி பயிர் செய்ய விரும்பும் விவசாயிகளுக்குத் தலா 3 ஏக்கருக்கு அதிகப்படாமல் நிலத்தை விவசாய இலாகாவினர் பகிர்ந்து கொடுப்பார்கள். மேலும் நிலத்தை யந்திரக்கலப்பைகளின் உதவி கொண்டு உழுது பண்படுத்துவார்கள். பயிர் செய்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளுக்கும் விதைகள் வாங்கவும் விவசாயிகளுக்கு தக்காவி கடன்கள் கொடுக்கப்படும். அந்த நிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பருத்தியை கதர் அபிவிருத்தி ஸ்தாபனம், விலைக்கு வாங்கி நூல் நூற்பவர்களுக்கு விநியோகிக்கும்.

இது ஒரு 'மோகோ' ரக பருத்திச் செடி. ஒரு நூல் நூற்பவரால் வளர்க்கப்பட்டது. இது 6 பவுண்டு பருத்தி கொடுத்திருக்கிறது. வருஷத்தில் இதில் கிடைத்த பருத்தியைக் கொண்டு அந்தக் குடும்பத்தினர் 120 சிட்டம் நூல் தயாரித்தார்கள்.

23A / 4-81

10451

HTE N53

அநுபந்தம்.

தீவிர கதர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்.

ஸ்தாபனம்.	ஸ்தாபனப் பிரதேசத்தி லுள்ள குடும்பங்கள்.	புதிவான நூற்பாளர்.		நெசவாளர்.		கதர் உற்பத்தி.	
		திட்டம் ஆரம்பித்த பொழுது.	1951-52 முடிவில்.	திட்டம் ஆரம்பத்தில்.	1951-52 முடிவில்.	1947-48.	1951-52
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
வெள்ளக் கோயில்.	17,982	7,416	14,829	240	488	1,97,880	6,48,229
அவனுசி.	11,516	6,427	9,251	120	716	2,12,464	5,27,602
சின்ன சேலம்.	13,372	2,485	4,884	117	163	50,844	61,883
கொட்டௌ ரட்லா.	10,172	1,446	2,305	128	134	71,464	70,734
சந்தானு தாலபாடு.	7,812	2,517	3,626	53	77	8,386	35,786
எர்ரகொண்ட பாலம்.	6,545	4,423	5,762	48	306	1,498	4,111
பய்யனூர்.	17,237	1,745	2,081	55	53	97,613	17,720
*கோயில் குண்ட்லா.	..	புள்ளி கிடைக்கவில்லே.	889	..	56	..	3,132
	84,636	26,459	43,627	761	1,993	6,40,149	13,69,197

*1951 ஆகஸ்டில் தான் திட்டம் இங்கு அமுலுக்கு வந்தது.

இந்த மூங்கில் ராட்டினத்தை மடித்து வைத்தக்கொள்ளலாம். இடது பக்கம் இருப்பது நூற்பதற்காக இணைத்துவைக்கப்பட்ட மூங்கில் ராட்டினம். மத்தியிலிருப்பது மடிக்கப்படுகிறது. வலது பக்கம் உள்ளது மடித்து வைக்கப்பட்டிருக்கும் ராட்டினம்.